## மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
## நாமக்கல் – 637 001.

### தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குத் தொழினுட்பத்தில் உய்த்துணரும் தரவுகளைக் கையாளுதல் பயிற்சி

******

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பாக எளச்சிப்பாளையம் ஒன்றியத்தில் பணிபுரியும் 22 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இணையவழி தொழினுட்பத்தின் மூலமாக கல்விசார் உய்த்துணரும் தரவுகளைச் சேகரிப்பதற்கும், சேமிக்கவும் எளச்சிப்பாளையம் வட்டார வளமையத்தில் நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்களின் தலைமையில் பயிற்சியளிக்கப்பட்டது.

இன்றைய சூழலில் கல்வியின் தரத்தை அதிகரிப்பதற்கும், முடிவுகள் எடுப்பதற்கும் தரவுகள் முக்கியமானதாகும். பள்ளி, படிப்பு, வீட்டுப்பாடம், கற்றல் அடைவு சார்ந்தத் தரவுகளை இணையவழியே கூகுள் படிவம், கூகுள் ஸ்பிரட்ஷீட், எக்ஸெல் போன்ற கணினி மென்பொருட்களைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் அதிக நேரத்தைச் செலவளிக்காமல் மிகவும் எளிதாகத் தரவுகளைப் பெற ஏதுவாக நிறுவன விவுரையாளர் பானுமதி அவர்கள் பயிற்சி அளித்தார்..

செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் கூகுள் படிவம், கூகுள் ஸ்பிரட் ஷீட் மற்றும் எக்ஸெல் போன்ற ஆன்லைன் கருவிகளைத் திறம்படப் பயன்படுத்தி, கல்வி சார்ந்த பயனுள்ளத் தரவுகளைச் சேகரிக்கவும், மாணவர் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் மற்றும் தரவுகளைத் தேவையான வடிவங்களில் மாற்றி அமைக்கவும் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியானது ஆசிரியர்களுக்கு ஒரு நடைமுறை கருவியாக விளங்கும் என்றும், கல்வியின் நவீனத் தேவைகளை எதிர்கொள்ள உதவும் டிஜிட்டல் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் இப்பயிற்சி உதவும் என பயிற்சியின் கருத்தாளர் பானுமதி அவர்கள் கூறினார்.

மாணவர்களின் சுய விவரம், மதிப்பெண் போன்ற தனித்த விவரங்கள், பள்ளி நிகழ்வுகள், கற்றல், ஓட்டெடுப்பு, வினாடி - வினா நடத்துதல் போன்றவற்றிற்கு கூகுள் படிவம் பயன்படுத்தவும், ஒரே நேரத்தில் ஆசிரியர்களிடமிருந்தோ, மாணவர்களிடமிருந்தோ, பெற்றோர்களிடமிருந்தோ தரவுகளை எளிதாகப் பெற கூகுள் ஸ்பிரட்ஷீட்டைப் பயன்படுத்தவும், கல்வி இலக்குகளை அடைவதற்கான வாய்ப்புகளைத் தரவுப் பகுப்பாய்வு செய்யவும், தரவுகளில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு விளைவின் தாக்கங்களை அறியவும், வரைபடங்கள் வரைய எக்ஸெல்லைப் பயன்படுத்தவும் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆசிரியர்கள் தரவுகளிலிருந்து பள்ளி வளர்ச்சி, கற்பித்தல் மேம்பாடு, மாணவர் கற்றல் அடைவு முன்னேற்றம் சார்ந்து ஆசிரியர்கள் மெய்ச் செய்திகளையும், உய்த்துணர உதவும் மூலகாரணங்களையும் அறிய இப்பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நிறுவன முதல்வர் செல்வம் கூறினார்.